**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண். 1225/ஆ5/2024, நாள்.30/05/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – புகையிலை எதிர்ப்பு தினம் 31.05.2025 அனுசரிக்கப்படுவதை தொடர்ந்து பள்ளிகளில் 100 Yards தொலைவிற்குள் உள்ள புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த பொருட்கள் மீதான நடவடிக்கை எடுப்பது – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.069212/எம்1/இ1/2025, நாள். 30.05.2025

*****

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, 31.05.2025 அன்று உலக புகையிலை எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுவதை தொடர்ந்து பள்ளிகளைச் சுற்றி 100 Yards (300 அடி)–க்குள் புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த பொருட்கள் விற்பனை தடைசெய்யப்படுகிறது.

புகையிலை எதிர்ப்பு வழிகாட்டுதலில் குறிப்பிட்டுள்ளபடி பள்ளி சுற்றுச் சுவர்களிலிருந்து 300 அடிக்குள் புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த பொருட்கள் விற்பதை தடை செய்யும் பொருட்டு பள்ளி நிர்வாகத்தால் சிவப்பு வண்ணக் கோடு தீட்ட வேண்டும் அல்லது புகையிலை இல்லா பகுதி என்ற பதாகை வைக்கப்பட வேண்டும்.

இதனை மீறுபவர்கள் மீது தேசிய உதவி எண்ணிற்கு (National Help Line No. 1800–11–2356) தொடர்பு கொண்டு புகார் அளிக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இப்பொருள் சார்பாக தனிக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீள தெரிவிக்கப்பப்படுகிறது.

இதனை மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்.
   அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்கள்,
   வேலூர் மாவட்டம்.

நகல் –

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.